**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.455** **நாள்: 08.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆபத்தான கட்டடங்களை அடையாளம் காணுதல் – கட்டடத்தில் வசிப்பவர்கள், வழிப்போக்கர்கள் மற்றும் அருகிலுள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆபத்தான கட்டடங்களை அடையாளம் காணுதல் – கட்டடத்தில் வசிப்பவர்கள், வழிப்போக்கர்கள் மற்றும் அருகிலுள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

கீழ்கண்ட விரிவான வழிகாட்டுதல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள், பழுதடைந்த / சிதிலமடைந்த கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக வழங்கப்படுகின்றன

1 உதவி பொறியாளர் (Assistant Engineer) / இளநிலைப் பொறியாளர் (Junior Engineer) ஆகியோர், தங்களுக்குரிய வார்டுகளுக்குள் உள்ள ஆபத்தான கட்டடங்களை, வழக்கமான தள ஆய்வுகளின்போது அடையாளம் கண்டு, அந்த விவரங்களை சம்பந்தப்பட்ட Unit Assistant Executive Engineer மற்றும் Zonal Executive Engineer ஆகியோருக்கு தெரிவிக்க வேண்டும்.

2. கட்டடத்தின் தன்மை, வயது மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக, அந்த இடத்தை Assistant Engineer, Assistant Executive Engineer மற்றும் Executive Engineer ஆகியோர் நேரில் ஆய்வு செய்ய வேண்டும்.

3. அந்த சொத்து அல்லது கட்டடம் தொடர்பாக உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களுக்கிடையே ஏதேனும் நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதா என்பதை அதிகாரிகள் சரிபார்க்க வேண்டும்.

4. நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருந்தாலோ அல்லது மாண்புமிகு நீதிமன்றத்தால் குறிப்பிட்ட உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டிருந்தாலோ, அந்த உத்தரவை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

5. கட்டடத்தின் கட்டமைப்பு நிலைத்தன்மையை (Structural Stability) Zonal Executive Engineer-களால் உறுதியாக மதிப்பிட முடியாத நிலையில், பொதுப்பணித்துறை (PWD), அண்ணா பல்கலைக்கழகம் அல்லது IIT மெட்ராஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு

நிறுவனத்திற்கு அனுப்பி, முறையான கட்டமைப்பு நிலைத்தன்மைச் சான்றிதழ் (Structural Stability Certificate) பெற வேண்டும்.

6. பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் கட்டடத்திற்கு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தால், அந்த பணிகளின் அளவைப் பொறுத்து நியாயமான காலக்கெடுவிற்குள் அவற்றை மேற்கொள்ளுமாறு கட்டட உரிமையாளருக்கு அறிவுறுத்த வேண்டும். அந்த பழுதுபார்ப்பு பணிகளுக்கான அறிவிப்பை (Notice) வழங்குவதற்கான உத்தரவு, சம்பந்தப்பட்ட வட்டார இணை/ துணை ஆணையர் (Regional Joint/ Deputy Commissioner) அல்லது துணை ஆணையர் (பணிகள்) (Deputy Commissioner ( Works ) அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும்.

7. ஆபத்தான கட்டடத்தினால் ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்காக அக்கட்டடத்தை இடிக்க வேண்டும் என்று அறிக்கையில் தெளிவாக பரிந்துரைக்கப்பட்டிருந்தால், சென்னை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 258-ன் கீழ், கட்டட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும். இந்த அறிவிப்பின் நகலும், PWD / அண்ணா பல்கலைக்கழகம் / IIT மெட்ராஸ் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் நகலும், கட்டடத்தில் வசிக்கும் வாடகைதாரர்களுக்கும் (Tenants) அனுப்பப்பட வேண்டும்.

8. உரிமையாளர் அந்த அறிவிப்பின்படி நடவடிக்கை எடுக்கத் தவறினால், பெருநகர சென்னை மாநகராட்சியால் அந்த கட்டடம் இடிக்கப்படும். மேலும், கட்டடத்தை இடிப்பதற்காக மாநகராட்சிக்கு ஏற்பட்ட செலவுகள் (Demolition Costs) கட்டட உரிமையாளரிடமிருந்து வசூலிக்கப்படும்.

9. வார்டு Assistant Engineer / Junior Engineer மற்றும் சம்பந்தப்பட்ட Unit Assistant Executive Engineer ஆகியோர், ஆபத்தான கட்டடங்களை அடையாளம் காண்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். இதன் மூலம் கட்டடத்தில் வசிப்பவர்கள், வழிப்போக்கர்கள் மற்றும் அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் அபாயங்களைத் தடுக்க வேண்டும்.

10. இந்த வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள், தனியார் கட்டடங்களுக்கும் அரசு கட்டடங்களுக்கும் பொருந்தும்.

11. ஆபத்தான கட்டடத்தை காலி செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறும் அல்லது காலி செய்ய மறுக்கும் எந்த நபரையும், காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன் அங்கிருந்து வெளியேற்றலாம்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

**GREATER CHENNAI CORPORATION**

**PRESS RELEASE**

**PR No:** 455 **Date:** 08.09.2026

Town Planning Department – Identifying Dangerous Structures – Guidelines and Procedures to prevent danger to occupants, passersby or occupiers of neighbouring structures – Issued

It is submitted that a detailed guidelines, duties and responsibilities are to be issued for taking action against the dilapidated conditions of buildings.

The following guidelines, duties are responsibilities are to be issued.

1. The divisional Assistant Engineer / Junior Engineer must identify dangerous buildings within their respective divisions during routine site inspections and inform the unit Assistant Executive Engineer and Zonal Executive Engineer.
2. The site shall be inspected by the Assistant Engineer, Assistant Executive Engineer, and Executive Engineer to assess the nature, age, and condition of the building..
3. Officials must verify whether there is any pending court case regarding the property or building between the owner and the tenants..
4. If a court case is pending or specific directions have been issued by the Hon'ble Court, the same must be strictly complied with.
5. If the Zonal Executive Engineers cannot conclusively assess the structural stability of a building, the matter must be referred to the Public Works Department (PWD), Anna University, or IIT Madras to obtain a formal structural stability certificate

6. Based on the obtained report, if any repair work is recommended for the structure, the building owner must be instructed to carry it out within a reasonable timeframe depending on the scope of repairs. The orders to issue this notice must be obtained from the respective Regional Joint or Deputy Commissioner.
7. If the report explicitly suggests demolition of the dangerous building to prevent risk, a notice under Section 258 of the Chennai City Municipal Corporation Act shall be issued to the building owner. A copy of this notice, along with the report obtained from PWD, Anna University, or IIT Madras, must also be sent to the tenants.
8. If the owner fails to comply with the notice, the building will be demolished by the Greater Chennai Corporation, and the demolition costs will be recovered from the owner.
9. The divisional Assistant Engineer / Junior Engineer and the unit Assistant Executive Engineer are hereby instructed to take necessary action and strictly follow these guidelines to identify dangerous buildings, thereby preventing risks to occupants, passersby, or neighboring residents.
10. These guidelines and procedures apply to both private and Government buildings.
11. Any person who disobeys orders or refuses to vacate a dangerous structure may be removed with the assistance of police officials.

**Issued By: Joint Director / Public Relations Officer,**
**Greater Chennai Corporation.**